செ.வெ.எண்-26 நாள்-20.04.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் அரியலூர் மற்றும் ஆண்டிமடம் ஆகிய ஒன்றிய ஊரக பகுதிகளில் உள்ள **தற்காலிக தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்** காலிப்பணியிடங்களுக்கு படித்த பெண்களுக்கு **26.04.2017 அன்று காலை 10.00 மணிக்கு மகளிர் திட்ட அலுவலகம், அரியலூர் மாவட்ட ஆட்சியரகம், அரியலூர்** என்ற இடத்தில் எழுத்து தேர்வு நடைபெறவுள்ளது.

**தகுதிகள்** :- (1) பன்னிரெண்டாம் வகுப்பு கட்டாயம் தேர்ச்சி பெற்றிக்க வேண்டும், பட்டப்படிப்புடன் கூடிய கணினி அறிவு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (2) மகளிர் சுயஉதவிக்குழுவைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். (3) வயது 21 முதல் 45-க்குள் இருக்க வேண்டும். (4) மகளிர் சுயஉதவிக்குழுவில் நிர்வாகியாக பணியாற்றிருக்க வேண்டும். (5) திட்டம் தொடர்பாக ஒன்றியத்தில் எந்த பகுதியிலும் பணியாற்ற விருப்பம் உள்ளவராக இருத்தல் வேண்டும். (6) கைப்பேசியில் குறுஞ்செய்தி (SMS) அனுப்ப மற்றும் படிக்க தெரிதல் வேண்டும். (7) வாகன உரிமம் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே, இந்த எழுத்துத்தேர்வில் அரியலூர் மற்றும் ஆண்டிமடம் ஒன்றிய பகுதிகளில் உள்ள 21 வயது முதல் 45 வயது வரை உள்ள மகளிர் சுயஉதவிக்குழுவைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.